பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 06 2026 TUESDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** தரமான கல்வியின் மூலம் சமத்துவம் மற்றும் உள்ளார்ந்த சமுதாயத்தை மாணவர்கள் உருவாக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

**2)** நாட்டில் இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான இடங்கள் ஒரு லட்சத்து **20** ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

**3)** புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்கள் உற்பத்தி குறித்த நிகழ்நேர தரவுகளை தமிழ்நாடு மின்வாரியத்தோடு பகிர்ந்துகொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் அறிவித்துள்ளார்.

**4)** ஆவின் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த வெள்ளை அறிக்கையை மாநில அரசு வெளியிட வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**5)** வடதமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>

தரமான கல்வியின் மூலம் சமத்துவம் மற்றும் உள்ளார்ந்த சமுதாயத்தை மாணவர்கள் உருவாக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் விசாகப்பட்டினத்தில் மத்திய பழங்குடியினர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், படித்த இளைஞர்கள் தங்களின் மேன்மையை மட்டும் சிந்திக்காமல், நலிவுற்ற மக்களின் உயர்த்துவதற்கான பங்களிப்பை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சமூக மாற்றத்தை உருவாக்குபவர்களாக மாணவர்கள் திகழ வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், வேலைவாய்ப்பை பெறுவதற்காக மட்டும் கல்வி கற்கக் கூடாது என்றும், சமுதாயத்தை வலுப்படுத்தவும், அதனை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவத்தை மாணவர்கள அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

**2047**-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க கல்வி கற்ற ஒவ்வொரு இளைஞரும் தங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கல்வியை அர்த்தமுள்ளதாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய குடியரசுத் தலைவர், ஏட்டுக்கல்வியை மட்டும் நம்பியிராமல், செயல்முறை அறிவாற்றலையும் மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்தார்.

பழங்குடியின மக்களின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கிலேயே மத்திய பழங்குடியினர் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்நிறுவனங்கள் பழங்குடியின மக்களின் திறன் மேம்பாடு, வாழ்க்கைத்தரம் மற்றும் அவர்களுக்கான சமூக நீதி மற்றும் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு துணை புரிய வேண்டும் என்றும் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

நாட்டில் இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான இடங்கள் ஒரு லட்சத்து 20 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று மருத்துவ கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், கடந்த 2014-ஆம் ஆண்டு 387 மருத்துவக் கல்லூரிகள் இருந்த நிலையில், தற்போது அவற்றின் எண்ணிக்கை 818-ஆக அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

மருத்துவத் துறையில் தரமான பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருவதாக திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>

புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்கள் தங்களின் மின் உற்பத்திக்கான நிகழ்நேர தரவுகளை உடனுக்குடன் தமிழ்நாடு மின்வாரியத்துடன் பகிர்ந்துகொள்வது இனி கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மின் உற்பத்திக்கான நிகழ்நேர தரவுகளை உடனுக்குடன் அளிக்காத நிறுவனங்கள் அளிக்கும் மின்சாரத்தில் பத்து சதவீதம் மின் கணக்கீடு குறைக்கப்பட்டு கணக்கிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மாநில மின்கட்டமைப்பை பாதுகாப்பாகவும், சீராகவும், சிக்கனமாகவும் இயக்குவதற்கு இந்த தகவல்கள் மிகவும் அவசியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு மின்சார கட்டமைப்பு விதிமுறையின்படி, காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யும் அமைப்புகள், உற்பத்திக்கான

தகவல்களை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

மாநில மின் கட்டமைப்பில் பாதுகாப்பு மற்றும் நம்பகமான மின் விநியோகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைச்சர் திரு நிர்மல் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

ஆவின் நிறுவனத்தின் செயல்பாடுகள் தொடர்பான வெள்ளை அறிக்கையை மாநில அரசு வெளியிட வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று பதிவிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடந்த சில தினங்களாக கோவையில் ஆவின் பால் மாதாந்திர அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுவந்த இரண்டு ரூபாய் தள்ளுபடி ரத்து செய்யப்படடிருப்பதாகவும், சென்னை உட்பட தமிழகம் முழுவதும் ஆவின் பால் விநியோகம் 30 சதவீதம் வரை குறைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆவின்பால் விற்பனை நிலையங்களில் ஒருவருக்கு ஒரு லிட்டர் பால் மட்டுமே வழங்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆவின் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்ட 60 சதவீதம் பால் தர விதிமுறைகளை பூர்த்தி செய்யவில்லை என்ற செய்திகள் வெளியாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அன்றாட அடிப்படைத் தேவைக்கு பெருமளவு நம்பியிருக்கும் ஆவின் நிறுவனத்தில் குளறுபடிகள் ஏற்பட்டுள்ள நிலையில், இரட்டிப்பு விலை கொடுத்து தனியார் பால் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் தமிழக மக்கள் நிதிச்சுமைக்கு ஆளாவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் ஊட்டச்சத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடைபெறும் குளறுபடிகளையும், முறைகேடுகளையும் களைய வேண்டும் என்றும், இதுகுறித்து வெள்ளை அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

ஆசிரியர் தகுதி தேர்வில் தற்போது பணியில் உள்ளவர்களுக்கான தேர்ச்சி மதிப்பெண்ணை 35 சதவீதமாக குறைக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 2011-ஆம் ஆண்டுக்கு முன்பாக பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் பயின்ற

பாடத்திட்டமும், தற்போதுள்ள பாடத்திட்டமும் முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பழைய பாடத்திட்டத்தில் பயின்றவர்களுக்கான மதிப்பெண்ணில் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

ஜல் ஜீவன் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உதகை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் உள்ள மக்கள் குடிநீருக்காக வனப்பகுதிக்கு செல்லும் நிலை மாறி, வீடுகளுக்கே குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருப்பது குறித்து பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

***(Sound Byte — மக்கள் — 30 Sec. )***

<<<<<>>>>>

வடதமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 40 Sec.)***

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

உலக இரத்த கொடையாளர் தினத்தை முன்னிட்டு, காஞ்சிபுரம் அரசு தலைமை பொது மருத்துமனையில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. திவ்யஸ்ரீ இரத்ததான கொடையாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

-------------------

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு இலவச தடுப்பூசி முகாம் நாளை தொடங்கி, ஆகஸ்ட் 10-ஆம் தேதிவரை நடைபெற உள்ளதாக ஆட்சியர் திரு பிரவீன் குமார் தெரிவித்துள்ளார்.

----------

தூத்துக்குடியில் மத்திய சுங்க இலாக முதன்மை ஆணையர் திரு தேவேந்திர வீ நாக் வெங்கர் தலைமையில் போதை இல்லா இந்தியா விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

-------------

திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையத்தில் மத்திய -மாநில அரசின் திட்டங்களை விளக்கும் விவசாயிகளுக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.

-----------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வேளாண் பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான வாங்குபவர், விற்பனையாளர் சந்திப்பு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது

---------------

நெல்லை ரயில் நிலையத்தில் நீண்ட நாட்களாக நடைபெற்று வந்த யார்டு மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக தெற்கு ரயில்வே மதுரை கோட்ட மேலாளர் திரு ஓம் பிரகாஷ் மீனா தெரிவித்துள்ளார்.

**<<<<<END>>>>>**